**நீர்கொழும்பு மாநகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 செப்தெம்பர் 08 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக நீர்கொழும்பு மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிவாரி நிறுவனங்களின் நிதி ஏற்பாடுகளில் மீளாய்வாண்டில் உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 17,169,892 தொகையான 23 செயற்திட்டங்களுக்காக நிதி 2020 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் கணக்குகளில் அவை பெறப்படவேண்டிய மற்றும் செலுத்தவேண்டியதாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வாறு நடவடிக்கை எடுக்ககப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | சிறிய ரக கெப் வண்டியொன்று மற்றும் மின்பிறப்பாக்கி இயந்திரம் என்பவற்றை கொள்வனவு செய்ததற்காக செலுத்தவேண்டியதாக முறையே ரூபா 5,203,860 மற்றும் ரூபா 5,000,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்தமையினால் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளில் ரூபா 10,203,860 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | வெல்லவீதி பால்திகொட்டுவ விளையாட்டு மைதானத்திற்கு கிரவல் இட்டு அமைக்கும் செயற்திட்டத்திற்காக 2018 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 1,901,077 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியதாக ரூபா 2,001,160 தொகையான மொத்த பணமும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,988,800 தொகையான இயந்திரம் மற்றும் 03 உபகரண விடயங்கள், 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9,279,600 தொகையான டெக்டர் மற்றும் 2017 திசெம்பர் 18 ஆம் திகதி நன்கொடையாக கிடைத்த Compost Pellet இயந்திரம் என்பன மூலதமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் விநியோகித்தல் கட்டளை விநியோகிக்கப்படாதிருந்தமையினால் மூலதனமாக்கல் மேறகொள்ளப்பட்டிருக்கவில்லை என அறியத்தருகின்றோம். |
| (உ) | மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைத்த நூலக புத்தகங்களின் பெறுமதி ரூபா 965,598 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஊ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட 07 கம்பெக்டர் வாகனங்கள் மற்றும் 08 டெக்டர்கள் என்பவற்றுக்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 31,439,368 தொகையான கடன் தவணைப் பணம் மூலதனமாக்கப்பட்டிருந்த போதும், சொத்துக்களை கொள்வனவு செய்யும் செலவின கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (எ) | களியாட்ட வரி, விளம்பர அறிவித்தல் கட்டணம் மற்றும் மாநகர சபை உறுப்பினர் சம்பளங்களுக்காக முன்கொண்டு செல்லப்பட்ட ரூபா 235,670 கூட்டுத்தொகையான | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை மீதிகளில் இருந்து குறைக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. | | எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஏ) | மீளாய்வாண்டில் ஆதனவரி மேலதிக வரவாக காண்பிக்கப்பட்ட தொகை, ஆதனவரி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் ரூபா 4,287,325 ஆக இருந்த போதிலும், கணக்குகளில் ரூபா 29,287,325 ஆக காண்பிக்கப்பட்டு அதனை செயற்படுத்தும் போது கிடைத்த நலன்கள் கணக்கிற்கு நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் மாற்றப்பட்டமையினால் அந்த வருமான கணக்கு ரூபா 25,000,000 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டதன் காரணமாக பற்றாக்குறையாக இருக்க வேண்டிய வருமானம் மற்றும் செலவின கணக்கு மிகையாகி இருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஐ) | முன்னைய ஆண்டின் போது முன்கொண்டுவரப்பட்ட ஆதனவரி ரூபா 6,834,022 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யும் போது ரூபா 10,448,332 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இறுதி கணக்குகளுக்காக சரியான கணக்கு வைக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஒ) | 2018 ஆம் ஆண்டின் பொருள் மெய்மெய்யாய்வு பரிந்துரையின் பிரகாரம் அகற்றப்பட்ட கிரயம் இனங்காண முடியாத சொத்துக்கள் மற்றும் 2013, 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மெய்யாய்வு பரிந்துரையின் பிரகாரம் அகற்றப்பட்ட ரூபா 16,780,000 தொகையான வாகனங்களின் கிரயம் என்பவற்றை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கிரயம் இனங்காணப்பட்டதன் பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஓ) | மீளாய்வாண்டிற்குரிய ஆதனவரி ஆதனங்களுக்கு புதிய மதிப்பீடு செய்தல், திருத்தங்கள் மற்றும் ஏனைய விடயங்களின் அடிப்படையில் இனங்காணப்பட்ட ரூபா 29,287,325 தொகையான ஆதனவரி சிட்டையிடல்கள் ஏனைய வருமான பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | 2018 ஆம் ஆண்டில் 02 கம்பெக்டர் வாகனங்கள் குறைவாக பதிவு செய்தலை சரிசெய்வதற்காக ரூபா 29,384,000 தொகை அறவிடக்கூடிய பயன்பாட்டு சேவை கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியம் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (க) | கிடைக்காத வருமானமாக கருதி நிலுவையாக இருந்த வருமான கணக்கில் மற்றும் திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்ட ரூபா 7,822,379 தொகை மீண்டும் மீளாய்வாண்டின் வருமானத்திற்கும் நிலுவையாக இருந்த வருமான கணக்கிற்கும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (கா) | மேல்மாகாண சுற்றுலா சபையின் சபைக்கு கையளிக்கப்பட்ட நீர் பூங்காவினை எத்துக்கால நீர் பூங்காவினை வாடகைக்கு வழங்கியதால் கிடைக்கின்ற பணத்தில் சபைக்கு கிடைக்க வேண்டிய 30 சதவீதத்திற்காக கணக்குகளில் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் காண்பிக்கப்பட்டுள்ள 12 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 19,350,307 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள இரண்டு வருமான விடயங்களின் மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 6,652,117 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பட்டோலைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக இருப்பு மீதிக்கும், இருப்பு கணக்கிற்கும் இடையே வித்தியாசமான ரூபா 62,534,989 தொகையில் ரூபா 51,746,189 தொகை இருப்பு சீராக்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டு மிகுதி ரூபா 10,788,800 தொகையான வேறுபாடு தொடர்ந்தும் காணப்பட்டதுடன், இருப்பு சீராக்கல் கணக்கிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பட்டோலைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முற்கொடுப்பனவு மீதியில் உள்ளடக்கப்பட்ட மதிப்பிழந்த காசோலையின் பெறுமதியான ரூபா 980,270 தொகையில் ரூபா 736,093 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட காசோலையாக இருந்தமையால் அவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், ரூபா 254,920 தொகையான 07 காசோலைகளின் உரிமையாளர்கள் குறிப்பிடப்படாதிருந்த காசோலைகளாகும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | களஞ்சிய கடன்பட்டோர் மீதியான ரூபா 5,099,478 தொகையில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் ரூபா 1,137,229 தொகை ஆகவும் 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான கடன்பட்டோர் ஆகவும் ரூபா 2,456,847 இருந்தன. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நானாவித கடன்பட்டோர் மீதியான ரூபா 2,585,007 தொகையில் 10 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் ரூபா 2,152,495 ஆகும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iv) | 02 ஆதனவரி ஆதனங்களுக்காக கிடைக்கப்பெற்ற மதிப்பிழந்த 2019 மார்ச் 29 ஆம் திகதிய ரூபா 129,100 தொகையான காசோலைக்குரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், அது வெற்றியளிக்காதிருந்ததுடன் அதன் பிரகாரம் கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (v) | நிலுவை வாராந்த சந்தை கட்டண வருமானம் ரூபா 1,668,244 தொகையில் ரூபா 559,554 தொகை 2010 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலத்திற்குரியதாகும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 37,310,029 தொகையான களஞ்சிய கடன்கொடுத்தோர் மீதியில் 05 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 17,981,758 ஆகும். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 2,868,097 தொகையான 02 கணக்கு விடயங்களுக்குரிய ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 1.3.5 அதிகார பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை விருந்தினர் கட்டணம் ரூபா 147,345 தொகை விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் இன்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | பதிவேடுகளை சரிசெய்வதற்கு சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய வரிச் சலுகை வழங்கும் அடிப்படையில் ரூபா 9,827,721 பெறுமதியொன்று சபை அங்கீகாரம் இன்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | சபை அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | 2020 சனவரி மாதம் முதல் சபை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு விநியோகிக்கப்பட்ட முற்பணம் ரூபா 1,358,785 தொகையை தீர்க்காதிருக்கும் போது உத்தரவாத பத்திரம் சமர்ப்பித்து திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது. | உறுதிப்படுத்தப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 218 பிரிவு. | நிதி ஆண்டு முடிவடைந்ததன் பின்னர் அந்த ஆண்டின் போது நகர சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் மற்றும் நிதியத்தின் | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட சட்டங்களை பின்பற்றுதல் தொடர்பில் முகாமைத்துவம் கவனம் | மாதாந்த கூற்றின் பொழிப்பு அறிக்கையொன்று நிதியாண்டின் இறுதியின் பின்னர் எதிர்காலத்தில் சபைக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெறுவனவுகள் தொடர்பான கூற்றொன்று சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்துதல் வேண்டும். | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2) | 1986 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட ரூபா 5,099,478 முற்பண தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் அறிக்கையிடப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 3,277,857 பெறுமதியான வைப்பு மீதியை இனங்கண்டு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 02 வருடங்களை விஞ்சியுள்ள ஏனைய வைப்புக்களை தற்போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மேல் மாகாணத்தின் 2008 இன் 01 இலக்க நகர மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவ விதி இலக்கம் 16, 50, 52 மற்றும் 56 | கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளின் போது உரிய விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விதிகள் பின்பற்றப்பட வேண்டும். | கழிவுப் பொருள் சேகரித்தல் தொடர்பாக மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், கழிவுப் பொருள் அளவு தொடர்பான அறிக்கை பேணிச் செல்லப்படுகின்றது. கழிவுப் பொருள் துணிகளால் மேவுகை செய்யப்பட்டிருந்ததுடன், உக்காத கழிவுப் பொருட்கள் புத்தளம் இன்சீ கம்பனிக்கு அனுப்பப்படுகிறது என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய பசார் II | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்குரிய நிபந்தனைகள் கோரப்பட்ட போதும் | உடன்படிக்கையின் பிராகரம் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் | உடன்படிக்கையின் பிரகாரம் தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என |

| | | | |
|---|---|---|---|
| பகுதியினதும் தலாஹேன பிரதேசத்தினதும் கழிவுப் பொருள்கள் அகற்றுவதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை இலக்கம் 05, 06, 08 மற்றும் 16 | உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 181,543,820 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 273,610,198 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையினால் தொடர்ச்சியாக மேலதிக பற்று வசதிகள் பெறப்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் வங்கி மேலதிக பற்று ரூபா 33,575,589 தொகை வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு தொடர்ச்சியாக மேலதிக பற்று வசதிகளை பெற்றுக் கொள்ளல் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 206(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்காத ஒன்றாகும். | சரியான நிதிக் கட்டுப்பாட்டை பேணிச் செல்வது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | 2019 சனவரி 24 ஆம் திகதி மற்றும் 2019 ஆகஸ்ட் 07 ஆம் திகதி பிரதான முகாமைத்துவ உதவியாளர் பரிந்துரையின் பிரகாரம் வங்கி மேலதிக பற்று பெறப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | வங்கி மேலதிக பற்றுக்கான வட்டி விகிதம் 13.25 மற்றும் கடன் தொகைக்கான வட்டி விகிதம் 12.75 சதவீதம் ஆக அறிவிக்கப்பட்டிருந்த போதும், 13.25 சதவீத | சபைக்கு மிகவும் நலன்வாய்ந்த திட்டமொன்று பின்பற்றப்பட வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் அறிக்கையிடப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | வட்டி விகிதாசாரத்தின் கீழ் மேலதிக பற்று வசதிகள் பெறப்பட்டு 2007 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 14,256,116 தொகையும், 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,387,685 தொகையுமாக மேலதிக பற்று வட்டி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | | |
| (இ) | சபை நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட 29 செயற்திட்டங்களுக்காக ரூபா 54,200,000 நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 88,907,923 தொகையான 23 செயற்திட்டங்களுக்கு இணங்கியிருந்தமையால் நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 34,707,923 தொகை செலவிடப்பட்டிருந்தது. | சிறந்த நிதிக் கட்டுப்பாட்டை பேணிச் செல்வது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | வீதவரியும் வரியும் | 171,296 | 165,026 | 106,338 | 126,585 | 147,458 | 169,807 | 169,484 | 109,892 |
| (ii) | வாடகை | 35,932 | 34,470 | 29,582 | 19,099 | 39,640 | 37,378 | 34,859 | 19,867 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 71,040 | 60,723 | 59,263 | 4,625 | 59,063 | 62,890 | 61,345 | 5,418 |
| (iv) | ஏனைய வருமானம் | 339,998 | 387,779 | 318,830 | 70,723 | 288,638 | 440,246 | 335,652 | 109,257 |
| | | 618,266 | 647,998 | 514,013 | 221,032 | 534,799 | 710,321 | 601,340 | 244,434 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கொச்சிக்கடை உப அலுவலகத்தின் பதிவேட்டின் பிரகாரம் 2019 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 9,905,000 தொகையான ஆதனவரி மீதியில் மீளாய்வாண்டின் போது ரூபா 3,921,797 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், அது ஒட்டுமொத்த நிலுவையில் 39.5 சதவீதம் ஆகும். | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி ஏற்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் எதிர்பார்த்த வருமானத்தின் இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | பிரதான அலுவலகத்தின் பதிவேட்டின் பிரகாரம் 2019 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 87,769,094 தொகையான மீதியில் மீளாய்வாண்டில் ரூபா 39,614,518 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், அது ஒட்டுமொத்த நிலுவையில் 45 சதவீதம் ஆகும். | நிலுவையை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 06 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டு ஆதனவரி நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், நிலுவையை செலுத்துவதற்கு வரியிறுப்பாளர்கள் அதிக கவனம் செலுத்தியிருக்கவில்லை என அறியத்தருகின்றோம். |

### 2.3.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏத்துக்கால கடற்கரை பூங்காவில் வாகன தரிப்பிட கட்டணம் அறவிடல் மற்றும் மலசல கூட முறைமையினை பராமரித்தல் ஒப்பந்தம் 2003 ஆம் ஆண்டு முதல் ஒரு தனியாருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டின் வரித் தொகையில் 10 சதவீதம் அதிகரிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா | பெறுகை செயல் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். | நிதி செயற்குழு மற்றும் சபை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | 2,244,000 வருடாந்த தொகையில் கேள்வி தாரரிடம் கோரியதன் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் போது பெறுகை செயல் நடைமுறைகள் பின்பற்றப்படாமல் கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். | | |
| (ஆ) | நீர்கொழும்பு ஏற்றுக்கால நீர் பூங்காவை பராமரித்தல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பெறுகை நடைமுறைகளை பின்பற்றாமல் தற்போது அதன் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றவரின் கோரிக்கையில் 2019 பெப்ரவரி 22 ஆம் திகதி முதல் மதிப்பீடு ஒன்று இன்றி ரூபா 100,000 மாதாந்த கட்டணமொன்றின் கீழ் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தத்தின் நிபந்தனையின் பிரகாரம் 07 நாட்களுக்குள் செயலாற்றல் பிணை முறியொன்று சமர்ப்பிக்க வேண்டி இருந்ததுடன், மாதாந்த தொகை அடுத்து வரும் மாதாத்தின் 10 ஆம் திகதியில் செலுத்த வேண்டியிருந்தது. எனினும், செயலாற்றல் பிணை முறி 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் மாத மாதாந்த கட்டணம் பெறப்படாதிருந்ததுடன், செயலாற்றல் பிணை முறை 2020 பெப்ரவரி 14 ஆம் திகதி காசாக்கப்பட்டிருந்த போதிலும் அறவிட வேண்டிய தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறைபாடுகளை பூர்த்தி செய்து கேள்வி கோரி வாடகையாளர் ஒருவரை தெரிவு செய்யும் வரை 2019 மார்ச் 07 ஆம் திகதிய பொதுச் சபை அங்கீகாரத்தின் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | காமச்சோடை ஞாயிறு சந்தை மற்றும் புதன் சந்தை வாடகைக்கு வழங்கும் போது பெறுகை நடைமுறைக்கு புறம்பாக வருடாந்த வாடகைத் தொகையில் 10 சதவீதம் சேர்க்கப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டில் அரைவாசியை விட அதிகரித்த காலம் உடன்படிக்கை செய்யப்படாமல் வாடகைப் பணம் சேகரிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. ஞாயிறு சந்தை மற்றும் புதன் கிழமை சந்தைகளுக்காக 2019 ஆம் ஆண்டிக்கான வைப்புப் பணம் முறையே ரூபா 205,269 மற்றும் ரூபா 150,335 தொகைகள் குறைவாக பெறப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டு உடன்படிக்கை செய்யப்பட்ட தொகைக்கும் சேகரிக்கப்பட்ட வருமானத்திற்கும் இடையே வேறுபாடு முறையே ரூபா 1,863,840 மற்றும் ரூபா 1,055,024 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 2,918,864 இனால் சபை நிதியத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | சபைக்கு மிகவும் நலன் கிடைக்கும் வகையில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதி செயற்குழு மற்றும் சபை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | புதிய பேரூந்து நிலைய சந்தைக் கடைத் தொகுதியின் இரண்டாவது மாடியின் திறந்த மண்டபத்தை வாடகைக்கு வழங்குவதற்குரிய 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1,313,025 தொகை கிடைக்கப் பெற்றிருந்ததுடன், மண்டபத்தின் குறைபாடுகளை சரிசெய்யும் போது முறையான பிராகாரம் உடன்படிக்கைகை கைச்சாத்திட்டு வருமானத்தை சேகரிப்பதற்கு 07 | முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

வருடங்கள் கடக்கும் வரையிலும் சபைக்கு முடியாதிருந்தது. 2012 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்ற மேற்கூறப்பட்ட தொகையும் வாடகையாளருக்கு மீள செலுத்தப்பட்டமையினால் சபை நிதியத்திற்கு நட்டமொன்ற ஏற்பட்டிருந்தது.

**2.3.4 அனுமதிப்பத்திர கட்டணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கழிவுப் பொருள் தளத்திற்கு பின்பக்கமாக உள்ள பகுதியின் மாஓயா எல்லையில் காணப்பட்ட 04 பன்றிக் கூடுகளுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது சுகாதார பரிசோதகரின் கவனத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். | பரீட்சித்து பார்த்ததன் பின்னர் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்குரிய தலாஹேன கொச்சிக்கடை உப அலுவலக அதிகார பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற 10 பொது ஆலைகளில் இருந்து வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பரீட்சித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பரீட்சித்து பார்த்ததன் பின்னர் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) | தலாஹேன உப அலுவலகத்திற்குரிய பிரதேசத்தில் சுற்றாடல் சபையில் பதிவு செய்துள்ள 20 அறைகளுக்கு குறைவான 02 ஹோட்டல்களுக்காக மீளாய்வாண்டில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | பரீட்சித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பரீட்சித்து பார்த்ததன் பின்னர் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247(அ)(2) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக சுற்றுலா சபை சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள ஹோட்டல்களுக்காக அறைகளின் அடிப்படையில் கட்டணம் அறவிடப்பட்டமையினால் அந்த ஹோட்டல்களில் நடாத்திச் செல்லப்படுகின்ற ஏனைய வருமான மூலங்களான மதுபான விற்பனை வருமானம், | ஏனைய வருமான மூலங்களில் கட்டணங்களை அறவிடுவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | பரீட்சித்து பார்த்ததன் பின்னர் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

விளையாட்டு அரங்கு கட்டணம், ஆயுர்வேத பஞ்சகரும சிகிச்சை போன்ற வருமானங்கள் முழுவதும் கவனத்தில் கொள்ளப்படாது தவிர்க்கப்பட்டுள்ளதுடன், அந்த வருமான மூலங்களுக்காக வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட கழிவுப் பொருள் வேறு பிரிக்கப்பட்டு சபை எல்லையில் சேகரித்தல் மற்றும் சபையில் இலத்திரனியல் உள்ளூராட்சி முறைமையொன்று ஸ்தாபித்தல் என்ற குறிகாட்டிகளில், கழிவுப் பொருட்களை வேறு பிரித்து வழங்கப்படுகின்ற அதிகார பிரதேசத்தின் 20 மொத்த பிரிவுகளிலும் 07 பிரிவுகள் மாத்திரம் ஆக இருந்ததுடன், சபையின் இலத்திரனியல் உள்ளூராட்சி முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### (ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 02 கழிவுப் பொருள் பசளை விற்பனை சாலைகள் தலாஹேன மற்றும் கொச்சிக் கடையில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், அது ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், | கழிவுப் பொருள் முகாமைத்துவ கொள்கையை திட்டமிடுவதற்கும் அமுல்படுத்துவதற்கும் சபை கவனம் செலுத்துல் வேண்டும். | உற்பத்தியில் மிகையொன்று காணப்படாமையினால் இது தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்தது என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுப்பசளை விற்பனை செய்யும் நடமாடும் சேவையில் விஷேட விழா சந்தர்ப்பங்களில் நகர எல்லையில் மற்றும் பேரூந்து தரிப்பிடங்களுக்கு அருகில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவைகள் ஆரம்பிக்கப்படவில்லை. | | |
| (ii) | உக்காத கழிவுப் பொருட்களை சேகரிக்கும் நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், அமுல்படுத்தப்படாதிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டின் போது மேல் மாகாண உள்ளுராட்சி அமைச்சின் கழிவுப் பொருள் நிலையமொன்றிலிருந்து உதவி கோரப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் முகாமைத்துவ கொள்கையை திட்டமிடுவதற்கும் அமுல்படுத்துவதற்கும் சபை கவனம் செலுத்துல் வேண்டும். | நிதி ஏற்பாடு வழங்கப்படாமையின் அடிப்படையில் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது என அறியத்தருகின்றோம். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இனங்காணப்பட்ட நிலைபேறான நுகர்வுகள் மற்றும் உற்பத்திகள் அநேகமானவை சான்றுபடுத்துதல் மற்றும் சகலவற்றிக்காகவும் போசிக்கப்பட்ட பூரணமான நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி, முழுமையான பயன்பாடு மற்றும் சிறப்பான தொழில்வாய்ப்பை முன்னேற்றுதல் போன்ற நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளின் செயல்முன்னேற்றம் 20 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. | எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி ஏற்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக 2019 ஆம் ஆண்டிற்கு உரியதாக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் முதலாம் காலாண்டிற்குரிய நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்தரம் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்த போதிலும் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ள முடியாதிருந்ததுடன் எதிர்பார்த்த இலக்கில் 20 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்வதற்கு முடியுமாக இருந்தது என அறியத்தருகின்றோம். |

(ஈ) நிதிஏற்பாடு வழங்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முன்னக்கரை மீனவர் படகு நிறுத்தி வைக்கப்படுகின்ற இடத்தை மேவுகை செய்யும் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக நிறுவனம் ஒன்றுடன் 2019 ஒக்தோபர் 18 ஆம் திகதி ரூபா 7,758,405 பெறுமதியில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2019 செப்தெம்பர் 16 ஆம் திகதியளவில் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அத்திகதி வரையிலும் அதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன், ஒப்பந்தகாரரினால் உடன்படிக்கை கைச்சாத்திடும் திகதி முதல் 14 நாட்களுக்குள் செயற்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய போதிலும், 2020 யூன் 30 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த செயற்திட்டம் கேள்வி கோரப்பட்ட சந்தர்ப்பத்தின் போது நிதி ஏற்பாடு வழங்கப்படாதிருந்ததுடன், செலவின தலைப்பு மாற்றுவதன் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீனவர்களின் பிரச்சினைகள் மேலெழுந்தமையினால் அந்த பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கப்படும் வரை தற்காலிகமாக இந்த நிர்மாணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்பதை அறியத்தருகின்றோம். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) கலாஹேன மற்றும் பசார் பகுதி II மற்றும் கலாஹேன பிரதேசத்தில் கழிவுப் பொருட்கள் சேகரிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அந்த கழிவுகள் சபையின் கழிவுப் பொருட்களை அகற்றுகின்ற காணியில் அகற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூபா 50,000 கட்டணமொன்று ஒப்பந்தகாரரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2019 சனவரி முதல் யூன் மாதம் வரை தனியார் நிறுவனமொன்றினால் அகற்றப்பட்டிருந்த கழிவுப் பொருள் 953 டெக்டர் லோட்கள் எண்ணிக்கையாக இருந்தது. அந்த | சபைக்கு நலன் பெறக்கூடிய முறையில் தீர்மானங்களில் கைச்சாத்திட வேண்டும். | மாதத்திற்கு ரூபா 50,000 கட்டணத்தை அறவிடுவதற்கு 2018 ஆகஸ்ட் 02 ஆம் திகதிய பொதுச் சபை அங்கீகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | காலப் பகுதியில் கிரவல் வழங்குதல் மற்றும் கழிவுப் பொருள் அடிப்படையில் கிரவல் மட்டப்படுத்துவதற்காக ரூபா 7,110,632 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் தனியார் நிறுவனத்தினால் கொண்டுவரப்பட்ட கழிவுப் பொருட்களுக்காக சபையினால் மாதம் ஒன்றுக்கு செலவிடப்பட்ட செலவினம் ரூபா 192,698 ஆகும். எனினும், அந்த நிறுவனத்திலிருந்து ரூபா 50,000 அறவிடப்பட்டிருந்தமையினால் மாதம் ஒன்றுக்கு ரூபா 142,698 அளவிலான நட்டமொன்று ஏற்பட்டமையினால் 2019 சனவரி முதல் யூன் வரை மொத்த நட்டம் ரூபா 856,188 ஆகும். | | |
| (ஆ) | சபை தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு சபையின் சட்ட உத்தியோகத்தருக்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், சபைக்கு எதிராக மற்றும் சபையினால் தொடுக்கப்பட்ட வழங்குகளுக்காக வெளிவாரி சட்டத்தரணிகளின் உதவி பெறப்பட்டு மீளாய்வாண்டின் போது மாத்திரம் ரூபா 782,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கடமைகளை கையளித்த பிரகாரம் கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பில் முகாமைத்தும் கவனம் செலுத்துதல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### 3.3.1 ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் மீதியில் சேவையை விட்டுச் சென்ற, மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 36 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய விழா முற்பணம் மற்றும் விஷேட முற்பணம் ரூபா 80,739 தொகை அறவிடப்படாதிருந்ததுடன், 18 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடவேண்டிய இடர் கடன் ரூபா | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வேறுபாடுகளை பரீட்சித்து அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். |

592,535 தொகையில் மீளாய்வாண்டில் எந்தவொரு தவணைப் பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ''ஹரித்த மித்துறு பிவிதுரு புற'' கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்கு சேர்க்கப்பட்ட ஊழியர்கள் வேறு இடங்களுக்கு நியமிக்கப்பட்டமையினால் கலாஹேன, பிட்டிப்பன மற்றும் பசார் II நகர பிரதேசங்களில் கழிவுப் பொருட்களை அகற்றும் நடவடிக்கைகள் தனியார் பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்டதுடன், அதற்காக மாதாந்தம் ரூபா 2,200,000 செலவினம் ஒன்றை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | ஆட்சேர்க்கப்பட்ட பணிகளுக்காக ஊழியர்களை ஈடுபடுத்துவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | ஒவ்வொரு செயற்திட்டத்தினதும் தேவையின் பிராகரம் சந்தர்ப்பத்திற்கு இனங்க ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், சேர்க்கப்பட்ட ஊழியர்கள் அதற்காக ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | குறண மேஜர் ராஜ் விளையாட்டு அரங்கில் அமைந்துள்ள மலசலம் அகற்றும் முறைமை மீண்டும் செயற்படக் கூடிய நிலைமையில் கொண்டுவருவதற்காக 2019 மார்ச் 25 ஆம் திகதி மிகுதி பணத்திற்காக கொடுப்பனவுகள் ஒரு மாதத்திற்குள் நீர் மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் பரிந்துரைக்கப்பட்ட போதும், நீர் மாதிரிகள் பரீட்ப்பதன் அடிப்படையில் நிறுத்தி வைத்தல் மற்றும் தாமதக் கட்டணம் குறைக்கப்பட்டு ரூபா 7,012,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2018 செப்தெம்பர் 14 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகள் 2018 நவம்பர் 20 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டமை ஒப்பந்த கம்பனியுடன் இணங்கிய 2018 நவம்பர் 20 ஆம் திகதி முதல் 2019 நவம்பர் 20 ஆம் திகதி வரையான உத்தரவாத காலம் வரை செயற்திட்டம் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், 2020 யூன் 15 ஆம் திகதி வரையிலும் அந்த குறைபாடுகள் சரிசெய்யப்படாதிருந்ததுடன், 2020 | செயற்திட்டத்தின் குறைபாடுகளை பூர்த்தி செய்து கொள்வது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | காணப்படுகின்ற குறைபாடுகள் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

பெப்ரவரி 24 ஆம் திகதி அளவில் ரூபா 676,323 பழுதுபார்த்தல் மதிப்பீடொன்று சமர்ப்பபிக்கப்பட்ட போதிலும், 2016 ஒக்தோபர் 14 ஆம் திகதி முதல் 2020 யூன் 30 ஆம் திகதி வரையிலும் அதனை வெற்றிகரமாக செய்துமுடிப்பதற்கு சபை தவறியிருந்தது.

**3.5 பெறுகைகள்**

**3.5.1 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) **இரண்டு மாடி நூலக கட்டிட நிர்மாணம்** | | |
| இரண்டு மாடி நூலக கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 157,101,803 தொகையில் ஒரு வருடத்தில் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டு 2016 மார்ச் 16 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்ட ரூபா 168,000,000 கடன் தொகையின் தவணைப் பணம் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட 02 வருட சலுகைக் காலம் முடிவடைந்து 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 88,155,805 தொகை மாத்திரமே பெறப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரின் கோரிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்படாமல் அவ்வப் போது காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கைக்கு முரணாக ஒப்பந்த கம்பனி மற்றும் ஆலோசனை நிறுவனத்துடன் கலந்துரையாடி உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அவர்களும் நிர்மாணங்களை இடை நடுவில் நிறுத்தியிருந்ததுடன், உடன்படிக்கை செய்யப்பட்ட கடப்பாடு இன்மையினால் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது. 2020 மார்ச் 11 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை | ஒப்பந்த காரரை கறுப்பு பட்டியலில் இட்டு சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்தை பூர்த்தி செய்து கொள்வதற்காக கால நீடிப்பு வழங்கப்பட்டு செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முயற்சித்த போதிலும், அந்த இலக்கை அடைவதற்கு முடியாதிருந்தமையினால் செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், பிணை முறி பணத்தை பணமாக்கிக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்த கம்பனியில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 2,427,020 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2020 யூன் வரையிலும் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | **கழிவுப் பொருள் நிலத்திற்கு கிரவல் வழங்குதல் மற்றும் சமப்படுத்துதல்** | | |
| (i) | இதற்காக ஒரு தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கிரவல் கொள்வனவு செய்வதற்கும் மேலும் தனியார் நிறுவனமொன்றுக்கு கழிவுப் பொருட்கள் மற்றும் கிரவலை சமப்படுத்துவதற்குமாக வழங்குவதற்கும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன், நிதிக் குழு அதை அங்கீகரித்திருந்தது. எனினும், பெறுகை வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளுக்கு முரணாக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினதும் நிதிக் குழுவினதும் தீர்மானங்களை கவனத்தில் கொள்ளாது கழிவுப் பொருட்களை அகற்றும் கேள்வி வழங்கப்பட்ட நிறுவனத்திற்கே மேற்கூறப்பட்ட பணிகளையும் வழங்குவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் தீர்மானம் தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். | ஒரே நிறுவனத்திற்கு கையளிப்பதால் ஆக்கபூர்வமான சேவையொன்றை பெறக்கூடியதாக இருக்கும் என்ற 2019 ஏப்ரல் சபை அங்கீகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். |
| (ii) | உடன்படிக்கையின் பிரகாரம் கழிவுப் பொருட்களின் அடிப்படையில் 4 – 6 அங்குலத்திற்கு இடையிலான கிரவல் படையொன்றை இடுத்துவதற்காக 2019 சனவரி முதல் யூன் வரை ரூபா 7,110,632 தொகை செலவிடப்பட்டிருந்தது. கிரவலை வழங்குதல் தொடர்பாக பதிவேடோ அல்லது அறிக்கையோ பேணிச் செல்லப்படாதிருந்ததுடன், எந்தவொரு உத்தியோகத்தினதும் மேற்பார்வைக்கும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் தளத்தில் உத்தியோகத்தின் மேற்பார்வையின் கீழ் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட வேண்டும். | இது தொடர்பாக சபை கவனத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.5 அறவிடுவதற்குள்ள மிகை கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 226(1) ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புவாய்ந்த நபர்களுக்கு எதிராக 2006 ஆம் ஆண்டு முதல் என்னால் விதிக்கப்பட் மிகைக் கட்டணங்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடுவற்கு உள்ள பணம் ரூபா 2,403,614 ஆகும். | மிகைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.6.1 விளைவற்ற சொத்துகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 17,819,076 பெறுமதியான 07 இயந்திரங்கள், மடி கணனி வகையின் கணனியொன்று மற்றும் பெறுமதி காண்பிக்கப்படாதிருந்த வய்ப்ரேட்டிங் வீதி செப்பனிடுகை இயந்திரம் என்பன விளைவற்று காணப்பட்டது. | சொத்துக்களை பயன்படுத்துதல் வேண்டும். | விநியோகிக்கப்படாதுள்ள களஞ்சிய பொருட்களை விரைவாக வழங்குவதற்கும் பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9,279,600 பெறுமதியான டெக்டர் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் கிடைத்த கம்பெக்டர் வாகனம் மற்றும் 2017 திசெம்பர் இல் நன்கொடையாக கிடைத்த Compost pellet இயந்திரம் என்பன விளைவற்று காணப்பட்டது. | சொத்துக்களில் இருந்து உச்ச பயன்பாடு பெறப்பட வேண்டும். | விநியோகிக்கப்படாதுள்ள களஞ்சிய பொருட்களை விரைவாக வழங்குவதற்கும் பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டமொன்று முன்னைய ஆண்டின் இறுதியில் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆகஸ்ட் 01 ஆம் திகதி பொதுச் சபைக்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

### 4.2 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் கணக்காண்டிற்காக விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாவிற்கும் மற்றும் 2019 ஆம் கணக்காண்டிற்காக விநியோகிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2020 யூன் 30 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாக பதிலளிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |